## <u>சேலம் மாநகராட்சி</u>

**2022ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28ம் தேதி புதன்கிழமை காலை 11.00 மணிக்கு சேலம் மாநகராட்சியின் மாமன்றக்கூடத்தில் மாநகராட்சி சட்டம் அட்டவணை 1, பத்தி 3(1)ன் கீழ் சேலம் மாநகராட்சியின் இயல்புக்கூட்டம் நடைபெறும்.**

---

### <u>பொருள்கள்</u>

**1)** சேலம் மாநகராட்சி மொத்த பரப்பளவு **93.34** ச.மீ மற்றும் **2011** ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி மொத்த மக்கள் தொகை **8,29,267** தற்பொழுது **2022**– ம் வருடத்தின் மக்கள் தொகையானது **9,81,000** ஆகும். மாநகராட்சிக்கு தேவையான குடிநீர் இரண்டு மிக பெரிய திட்டங்களான நங்கவள்ளி – சேலம் ஒருங்கிணைந்த குடிநீர் திட்டம் **(1952)** மற்றும் ஒருங்கிணைந்த கூட்டு குடிநீர் திட்டம் **(2014)** மூலம் நாள் ஒன்றுக்கு **150.5** MLD குடிநீர் மாநகராட்சிக்கு வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது வழங்கும் குடிநீரின் அளவானது, தற்போது அதிகரித்து வரும் மக்கள் தொகைக்கு போதுமானதாக இல்லை. இதனை கருத்தில் கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் **11–12–2021** அன்று, சேலம் மாநகர மக்களுக்கு, தங்கு தடையின்றி குடிநீர் வழங்கும் திட்டம் விரைவில் கொண்டு வரப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் சேலம் மாநகராட்சி , M/S. Vidya Consultants Pvt. Ltd., Secundrabad தொழில்நுட்ப ஆலோசகராக நியமித்து விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க அறிவுறுத்தப்பட்டது.

M/S. Vidya Consultants Pvt. Ltd., ரூ.**693.49** கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரித்து, மாநில அரசால் Amrut திட்டத்திற்கு, திட்ட இயக்குனரின் (TUFIDCO) ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது.

இத்திட்டம், மாநில அரசால் நியமனம் செய்யப்பட்ட, மாநில அளவிலான உயர் அதிகாரம் கொண்ட குழுவால் (State High Powered Committee (SH PSC) 27-06-2022 அன்று ஒப்புதல் வழங்கப்பட்டது. இக்குழு, இத்திட்டத்தினை தனியார் பங்களிப்புடன் செயல்படுத்த அறிவுறுத்தப்பட்டது. இதன் அடிப்படையில், தமிழ்நாடு உள்கட்டமைப்பு வாரியத்தால் தேர்ந்து எடுக்கப்பட்ட பின்வரும் 5 ஆலோசக நிறுவனங்களில்

தொடர்ச்சி..

| SL No. | Name of the Firms |
|---|---|
| 1. | CRISIL Risk and Infrastructure Solutions Ltd |
| 2. | Deloitte Touche tohmatsu India LLP |
| 3. | Ernst & Young LLP (Satyam Shivam Sundaram) |
| 4. | Tendon Urban Solutions P.Ltd., JV with Infranomics Consulting LLP |
| 5. | InfraEN (India) Pvt. Ltd |

ஏதேனும் ஒரு நிறுவனத்தை நியமித்து, இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு தேவையான ஆவணங்களை தயாரித்திடவும், மேற்படி தனியார் நிறுவனங்களுக்கு கடிதம் அனுப்பி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை ஏற்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

அனுமதிக்கலாம்.

**(இ3/12006/2021)**

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

**2)** சேலம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நங்கவள்ளி மற்றும் மேட்டூர் தொட்டில்பட்டி தனிக்குடிநீர் திட்டம் ஆகிய இரு குடிநீர் திட்டங்களில் இருந்து கிடைக்கபெற உள்ள அதிகபட்ச அளவான **200** MLD கொள்ளளவு குடிநீரினை கொண்டு **24** மணி நேரமும் தங்கு தடையின்றி சீரான குடிநீர், அனைத்து மாநகர பொதுமக்களுக்கும் வழங்கும் பொருட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் **11–12–2021–**ஆம் தேதியில் அறிவிக்கப்பட்டது. இத்திட்டப்பணிக்கான விரிவான திட்ட அறிக்கை தொழில் நுட்ப கலந்தாலோசக நிறுவனமான M/s. vidya consultants Pvt. Ltd., Secunderabad அவர்களால் உத்தேச மதிப்பீடு ரூ.**693.49/–** கோடிக்கு தயாரிக்கப்பட்டு, TUFIDCO சென்னை, நிறுவனத்தால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதை தொடர்ந்து **27–6–2022** அன்று நடைபெற்ற State High Powered Steering Committee ( SHPSC) of AMRUT 2.0 – வின் மூன்றாவது கலந்தாய்வு கூட்டத்தில் மேற்படி திட்டம் குறித்தான உத்தேச மதிப்பீடு தொகை ரூ**693.49** கோடிக்கு தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கையினை பொருள் அனுமதிக்கு வைக்கப்பட்டதில், மேற்படி திட்டத்திற்கான Public Private Partnership (PPP) முறையில் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது.

மேலும் இத்திட்டதிற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.**693.49** கோடிக்கு கீழ்க்கண்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் ( Funding Pattern ) செயல் படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| **1.** | மத்திய அரசின் நிதி | **(30%)** | - | ரூ. **208.05** |
| **2.** | மாநில அரசின் நிதி | **(10%)** | - | ரூ. **69.35** |
| **3.** | மாநகராட்சி பங்கு (Corporation / External aid) | **(60%)** | - | ரூ. **416.09** |
| | | | | ரூ. **693.49** கோடி |

தொடர்ச்சி..

இந்நிலையில், மேற்படி திட்டத்தினை PPP முறையில் செயல்படுத்திட தமிழ்நாடு உட்கட்டமைப்பு வளர்ச்சி வாரியம் (Tamil Nadu Infrastructure Development Board (TNIDB)), சென்னை அவர்களிடம் உரிய அனுமதி பெறவேண்டியுள்ளது. எனவே, அதன் பொருட்டு, தேவையான முன்மொழிவுகளை TNIDB -க்கு அனுப்பவும், அவ்வாறு TNIDB –க்கு அனுப்பிய பிரேரணைகள் குறித்த விபரங்களை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு தெரியப்படுத்தவும், மேற்படி குடிநீர் திட்டப் பணிக்கான நிதி ஒதுக்கீட்டில் மத்திய அரசின் மான்யம் மற்றும் மாநில அரசின் பங்குத்தொகை போக மாநகராட்சியின் பங்குத் தொகையை மாநகராட்சி பொது நிதி மற்றும் குடிநீர் நிதியிலிருந்தோ, (அ) மாநில அரசின் மான்யம் (அ) நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் உதவி பெற்றோ பணியினை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

அனுமதிக்கலாம்.

**(இ3/12006/2021)**

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

**3)** 15–வது மத்திய நிதிகுழு 2022–2023ம் ஆண்டு பரிந்துரையின் படி Solid Waste Management) 'திடக்கழிவு மோண்மை பணிகள்' மற்றும் 'குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீர் மேலாண்மை' (Water Supply and Waste Water Management) பணிகள் மேற்கொள்ள சேலம் மாநகராட்சிக்கு 2022–2023ம் ஆண்டுக்கு Tied Grant ரூ. 46.87 கோடியும், Un Tied Grant ரூ.31.25 கோடியும், ஆக மொத்தம் ரூ.78.12 கோடி நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

15–வது மத்திய நிதிகுழு 2022–2023ம் ஆண்டு வழிகாட்டுதலின்படி சேலம் மாநகராட்சி 60 கோட்டங்கள், 4 வார்டு அலுவலகங்கள் மற்றும் மைய அலுவலகத்தில் பயோ மெட்ரிக் வருகை பதிவேடு மற்றும் ஊதிய மேலாண்மை அமைப்பு ஆகிய விபரங்களை ஓராண்டுக்கான செயல்பாடுகள் மற்றும் பதிவிடுதல், பராமரிப்பு பணி மேற்கொள்ள மதிப்பீடு தொகை ரூ.35.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பணியினை நிறைவேற்றுவதற்கு 12.07.2022ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி தேதியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் பின்வருமாறு தயாரிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை மற்றும் சதவீதம் | வைப்புத் தொகை செலுத்திய விபரம் |
|---|---|---|---|
| 1 | **M/s. Salieabs Electronics Engineers LLP, Salem-2 (L 1)** | ரூ.29,34,250.00<br>0.79 %<br>மதிப்பீட்டை விட குறைவு | வரைவோலை எண், 486447,<br>நாள்.11.07.2022,<br>தொகை ரூ.35,000/–<br>**IDFC FIRST Bank. Salem Branch** |
| 2 | M/s. Dilogy Solutions LLP, Salem-2 (L 2) | ரூ.30,15,000.00<br>1.94 %<br>மதிப்பீட்டை விட அதிகம் | வரைவோலை எண், 486448,,<br>நாள்.11.07.2022<br>தொகை ரூ.35,000/–<br>IDFC FIRST Bank. Salem Branch |

தொடர்ச்சி..

மேற்காணும் வரிசை எண்.1ல் கண்டுள்ள M/s. Salieabs Electronics Engineers LLP, Salem (L 1) என்ற ஒப்பந்ததாரர் ரூ.29,34,250.00/–மதிப்பீட்டை விட 0.79 % குறைவாக வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் கடிதம் எ ண் 253 /இஎல்இசி / 08–2, நாள் 01.09.2008 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண்.258 நாள் 26.08.2008 ல் தெரிவிக்கப்பட்டுள்ள மாநகராட்சி சட்ட திருத்த விதிகளின்படி (99,100 மற்றும்101 ன்படி) மற்றும் மன்றம் தனது 30.09.2008ம் தேதிய, 290 எண் கொண்ட மன்ற தீர்மானத்தின்படி, குறைவாக வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொண்டு, 2022–2023ம் ஆண்டு மத்திய நிதிகுழு மான்யத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளதாலும் பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதியினை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதையும், பணியை நிறைவேற்றுவதற்கு, ஒப்பந்ததாராருக்கு பில் தொகை வழங்குவதற்கும், எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளுக்கும் மன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :</u>

1. மன்றம் பின்னேற்பு வழங்கி அங்கீகரிக்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி 2022–2023ம் ஆண்டு மத்திய நிதிகுழு மான்யத்தின் கீழ் மேற்படி பணியினை எடுத்துக் கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(இ7/ம.எண்.500/M/2022–2023)**

தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2, அனுமதிக்கப்பட்டது.

4) சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம் கோட்டம் எண்.31 மைய அலுவலகத்தில் 884 kgs (13பேர்) திறன் கொண்ட லிப்ட் இயங்கி வருகிறது. Lift.No/s/2k/1028 ஆகும். மேற்படி லிப்ட் ஜான்சன் லிப்ட் பிரைவேட் லிமிடெட் மூலம் ஆண்டு பராமரிப்பு ஒப்பந்தம் அடிப்படையில் (AMC) பராமரிக்கப்பட்டு வந்தது. தற்பொழுது Annual maintenance contract (AMC) ஒரு வருட காலம் முடிந்துவிட்டது. இதனை மீண்டும் AMC முறையில் பராமரிக்க வேண்டியுள்ளது. எனவே, மெசர்ஸ்.ஜான்சன் லிப்ட் பிரைவேட் லிமிடெட் C.T.O. காலனி, அழகாபுரம், சேலம்–4, அவர்கள் ஆண்டு பராமரிப்பு தொகை ரூ.99700/– மற்றும் ஜி.எஸ்.டி. ரூ.17946/– ஆக மொத்தம் ரூ.1,17,646/– வழங்கியுள்ளார். அதன்படி 2022–2023ம் ஆண்டு பராமரிப்பு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை 2022–2023ம் ஆண்டு பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

**(இ7/8198/2022–2023)**

தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2, அனுமதிக்கப்பட்டது.

**5)** சேலம் மாநகராட்சி கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகத்திற்கு சம்மந்தப்பட்ட கோட்டம் எண்.46–ல்ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள திருமணி நாளங்காடி 'எ' பிளாக் முதல் தளம் கடைஎண் 9, 'பி' பிளாக் முதல் தளம் கடைஎண் 19,20, 'சி'பிளாக் தரைதளம் கடை எண் 25 மற்றும் 'சி'பிளாக் முதல் தளம் கடை எண் 29, 30 ஆகிய கடைகளுக்கு 01.07.2020, 18.08.2021, 03.09.2021 மற்றும் 28.10.2021 ஆகிய தேதிகளில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு மன்ற அனுமதி எண்.56, நாள்:01.07.2020, எண்.90 நாள்:28.08.2021, எண்.122,நாள்:30.09.2021 மற்றும் எண்.190 நாள்: 30.11.2021 ல் வழங்கப்பட்டுள்ளது.மேலும்03.07.2020, 09.09.2021, 09.11.2021, மற்றும் 29.09.2021ம் தேதியில்அலுவலகம் மூலமாக கடை ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

தற்போது கடை வாடகைதாரர் 22.08.2022 மற்றும் 12.09.2022–ம் தேதிய மனுவில் மேற்படி கடைகளில் வியாபாரம் சரிவர நடைபெறாததால், வாடகை தொகை செலுத்த முடியாததாலும்,மேற்படி கடை தொடர்ந்து நடத்திட விருப்பமில்லை எனவும், செலுத்த வேண்டிய வாடகை தொகை போக மீதம் தொகையினை வழங்கிட கோரியும் கடை திரும்ப ஒப்படைத்துள்ளனர்.

எனவே 'எ' பிளாக் முதல் தளம் கடை எண்9 'பி' பிளாக் முதல் தளத்தில் கடைஎண்19,20, 'சி'பிளாக் தரைதளம் கடை எண் 25 மற்றும் 'சி'பிளாக் முதல் தளம் கடை எண் 29,30 ஆகிய கடைகளுக்கான உரிமத்தை ரத்து செய்து மறு ஏல நடவடிக்கை மேற்கொள்ளவும்,செலுத்த வேண்டிய கேட்பினை வைப்பு தொகையில் இருந்து ஈடு செய்து மீதம் தொகை வழங்கவும்,பின்னிட்டு மாதத்திற்கு கேட்பினை கேட்பு பதிவேட்டிலும்,கணினியிலும் கேட்பினை நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :</u>

1) அனுமதிக்கலாம் .
2) வாடகைதாரர் செலுத்த வேண்டிய தொகை மற்றும் ஜி.எஸ்.டி. மற்ற பிடித்தங்கள் போக மீதம் தொகையினை வைப்புத்தொகையிலிருந்து வழங்கிடவும் அனுமதிக்கலாம்.

**(எம்2/1293/2020)**

தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2, அனுமதிக்கப்பட்டது.

**6)** சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்கு சம்மந்தப்பட்ட "நவீன மீன் மார்க்கெட் கட்டண வசூல் (ஆண்டு குத்தகை) இனத்திற்கு" 2022–2023 ம் ஆண்டு முதல் 2025–2026 ம் ஆண்டு முடிய மூன்றாண்டு காலத்திற்கு, ஆண்டிற்கு 5% உயர்வு செய்து பொது ஏலம் / டெண்டர் நடவடிக்கை மேற்கொள்ள மாமன்ற தீர்மானம் எண்.408, நாள்: 24.08.2022ல் அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

தொடர்ச்சி..

அதனடிப்படையில் ‘‘நவீன மீன் மார்க்கெட் கட்டண வசூல் (ஆண்டு குத்தகை) இனத்திற்கு, 07.09.2022ம் தேதிய ஒப்பந்தபுள்ளி அழைப்பில் ஒரு நபரிடமிருந்து மட்டுமே முன்வைப்புத் தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளி மூலம் டெண்டர் வரப்பெற்றுள்ளது. ஏலம் கூற எவரும் முன்வரவில்லை. அதன் விபரம் கீழ்கண்டுள்ளவாறு

| வ. எண் | பெயர் மற்றும் முகவரி | டெண்டரில் உள்ள தொகை ரூ. | ஏலம் | டெபாசிட் தொகை விபரம் ரூ. | 1% வைப்புத் தொகை ரூ. | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | ஜெ.சூரியன் த/பெ ஜெயராஜ் 5/396, கல்யாண சுந்தரம் காலனி, ஜாகீர் சின்ன அம்மாபாளையம், சேலம்– 636 302. | ரூ.7,54,000/– | ஏலம் கோர முன்வரவில்லை | ரூ.2,00,000/– இந்தியன் ஓவர்சீஸ் பேங்க், சூரமங்கலம் கிளை, சேலம். வங்கி வரைவோலை எண்.281535, நாள்: 05.09.2022 | ரூ.2,000/– இந்தியன் ஓவர்சீஸ் பேங்க் சூரமங்கலம் கிளை, சேலம். வங்கி வரைவோலை எண்.281534, நாள்: 05.09.2022 | முந்தைய ஆண்டைவிட ரூ.37,375/– கூடுதலாக |

மேற்காணும் அட்டவணையில் திரு.ஜெ.சூரியன் த/பெ ஜெயராஜ் சேலம் என்பவரின் டெண்டரில், உச்சகேள்வியாக ஆண்டுக்கு ரூ.7,54,000/– கோரியுள்ளார். இது சென்ற ஆண்டு டெண்டர் தொகை (ரூ.7,16,625/–) மதிப்பைவிட கூடுதலாக குறிப்பிட்டு வரப்பெற்ற தொகை ரூ.37,375/– ஆகும்.

எனவே, மேற்படி குத்தகை இனத்திற்கு வேறு ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறாத நிலையிலும், மேலும் சென்ற ஆண்டின் டெண்டர் தொகை மதிப்பை விட கூடுதலாக வரப்பெற்றதாலும், மேற்படி, குத்தகை இனத்திற்கு முன்வைப்புத் தொகை செலுத்தி பொது டெண்டரில் உச்சக்கேள்வி கோரியுள்ள திரு.ஜெ.சூரியன் த/பெ ஜெயராஜ் சேலம், என்ற குத்தகைதாரருக்கு மாநகராட்சியின் குத்தகை ஏலம் நிபந்தனைகளுக்குட்படுத்தி, முதலாம் ஆண்டின் குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து இரண்டாம் ஆண்டிற்கான குத்தகை தொகையாகவும், இரண்டாம் ஆண்டின் குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து மூன்றாம் ஆண்டிற்கான குத்தகை தொகையாகவும், குத்தகை நிர்ணயம் செய்து, 01.10.2022 முதல் 30.09.2025 வரை மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்க நடவடிக்கை பொருட்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு: –</u>

அனுமதிக்கலாம்.

**(கே1/2236/2019)**

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

7) சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்கு சம்மந்தப்பட்ட புதிய பேருந்து நிலையம் காலியிடத்தில் தனியார் பொழுது போக்கு அம்சங்கள் நிறைந்த மாபெரும் வீட்டு உபயோக பொருட்கண்காட்சி 15.11.2022 முதல் 03.01.2023 ஆம் தேதிவரை 50 நாட்களுக்கு பொருட்காட்சி நடத்துவதற்கு அனுமதி வழங்குமாறும், காலி மைதானத்திற்கு நிர்ணயிக்கும் வாடகை மற்றும் வரித் தொகையினை உடனே செலுத்த உள்ளதாகவும் திருவாளர்கள்.ஜெ.கே.எண்டர்பிரைசஸ், 144, அந்தோணிபுரம், சேலம், நிறுவனத்தினர் விண்ணப்பத்தில் கேட்டுக்கொண்டுள்ளதின்பேரில், சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்கு சம்மந்தப்பட்ட புதிய பேருந்து நிலையம் கிழபுறம் உள்ள மாநகராட்சி பயன்பாட்டு பகுதி நீங்கலாக மீதமுள்ள காலியிடத்தில் தனியார் பொழுது போக்கு அம்சங்கள் நிறைந்த மாபெரும் வீட்டு உபயோக பொருட்கண்காட்சி 15.11.2022 முதல் 03.01.2023 ஆம் தேதிவரை 50 நாட்களுக்கு மாநகராட்சி விதிகளுக்குட்பட்டு பொருட்காட்சி அமைத்து நடத்திட முன்வைப்புத் தொகை ரூ.2,00,000/–ம் மற்றும் வாடகைத் தொகை ரூ.9,00,000/–ம் என நிர்ணயம் செய்து, திருவாளர்கள்.ஜெ.கே.எண்டர்பிரைசஸ், சேலம் நிறுவனத்திற்கு அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அனுமதிக்கலாம்.

**(கே1/3723/2022)**

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

**8)** சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்கு சம்மந்தப்பட்ட புதிய பேருந்து நிலையம் கிழபுறம் உள்ள காலியிடத்தில் (சுமார் 4 ஏக்கர்) தனியார் வீட்டு உபயோக பொருட்காட்சி மற்றும் ராட்டினங்கள் & வண்ண மீன்கள் கூடிய பொருட்காட்சி 05.01.2023 முதல் 24.02.2023ஆம் தேதிவரை 51 நாட்களுக்கு நடத்துவதற்கு அனுமதி வழங்குமாறு திருவாளர்கள். மதுரை எண்டர்டைன்மெண்ட், மதுரை, நிறுவனத்தினர் விண்ணப்பத்தில் கேட்டுக்கொண்டுள்ளதின்பேரில், சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்கு சம்மந்தப்பட்ட புதிய பேருந்து நிலையம் கிழபுறம் உள்ள மாநகராட்சி பயன்பாட்டு பகுதி நீங்கலாக மீதமுள்ள (சுமார் 4 ஏக்கர்) காலியிடத்தில் தனியார் வீட்டு உபயோக பொருட்காட்சி மற்றும் ராட்டினங்கள் & வண்ண மீன்கள் கூடிய பொருட்காட்சி 05.01.2023 முதல் 24.02.2023ஆம் தேதி வரை பொருட்காட்சி மாநகராட்சி விதிகளுக்குட்பட்டு அமைத்து நடத்திட 51 நாட்களுக்கு முன்வைப்புத் தொகை ரூ.2,00,000/–ம் மற்றும் வாடகைத் தொகை ரூ.9,00,000/–ம் என தனியார் பொருட்காட்சி நடைபெறும் நாள் முதல் முடியும் வரை நிர்ணயம் செய்து, திருவாளர்கள்.மதுரை எண்டர்டைன்மெண்ட், மதுரை, நிறுவனத்திற்கு அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அனுமதிக்கலாம்.

**(கே1/3600/2022)**

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

**9)** சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்கு சம்மந்தப்பட்ட புதிய பேருந்து நிலையம் காலியிடத்தில் தனியார் பொழுது போக்கு அம்சங்கள் நிறைந்த மாபெரும் வீட்டு உபயோக பொருட்கண்காட்சி **01.03.2023** முதல் **16.04.2023** ஆம் தேதிவரை **47** நாட்களுக்கு பொருட்காட்சி நடத்துவதற்கு அனுமதி வழங்குமாறும், காலியிடத்திற்கு நிர்ணயிக்கும் வாடகை மற்றும் வைப்புத் தொகையினை உடனே செலுத்த உள்ளதாகவும் சக்சஸ் மீடியா **17/7A**, அய்யாசாமி நெய்கார் தெரு, கோயமுத்தூர் நிறுவனத்தினர் விண்ணபத்தில் கேட்டுக்கொண்டுள்ளதின்பேரில், சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்கு சம்மந்தப்பட்ட புதிய பேருந்து நிலையம் கிழபுறம் உள்ள மாநகராட்சி பயன்பாட்டு பகுதி நீங்கலாக மீதமுள்ள காலியிடத்தில் தனியார் பொழுது போக்கு அம்சங்கள் நிறைந்த மாபெரும் வீட்டு உபயோக பொருட்கண்காட்சி **01.03.2023** முதல் **16.04.2023** ஆம் தேதிவரை **47** நாட்களுக்கு மாநகராட்சி விதிகளுக்குட்பட்டு பொருட்காட்சி அமைத்து நடத்திட முன்வைப்புத் தொகை ரூ.**2,00,000/–**ம் மற்றும் வாடகைத் தொகை ரூ.**9,00,000/–**ம் என நிர்ணயம் செய்து, சக்சஸ் மீடியா, கோயமுத்தூர் நிறுவனத்திற்கு அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

அனுமதிக்கலாம்.

**(கே1/3724/2022)**

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

**10)** சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்கு சம்மந்தப்பட்ட புதிய பேருந்து நிலையம் கிழபுறம் உள்ள காலியிடத்தில் (சுமார் **4** ஏக்கர்) தனியார் வீட்டு உபயோக பொருட்காட்சி மற்றும் ராட்டினங்கள் & வண்ண மீன்கள் கூடிய பொருட்காட்சி **18.04.2023** முதல் **04.06.2023**ஆம் தேதிவரை **48** நாட்களுக்கு நடத்துவதற்கு அனுமதி வழங்குமாறு திருவாளர்கள். மதுரை எண்டர்டைன்மெண்ட், மதுரை, நிறுவனத்தினர் விண்ணபத்தில் கேட்டுக்கொண்டுள்ளதின்பேரில், சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்கு சம்மந்தப்பட்ட புதிய பேருந்து நிலையம் கிழபுறம் உள்ள மாநகராட்சி பயன்பாட்டு பகுதி நீங்கலாக மீதமுள்ள (சுமார் **4** ஏக்கர்) காலியிடத்தில் தனியார் வீட்டு உபயோக பொருட்காட்சி மற்றும் ராட்டினங்கள் & வண்ண மீன்கள் கூடிய பொருட்காட்சி **18.04.2023** முதல் **04.06.2023**ஆம் தேதிவரை பொருட்காட்சி மாநகராட்சி விதிகளுக்குட்பட்டு அமைத்து நடத்திட **48** நாட்களுக்கு முன்வைப்புத் தொகை ரூ.**2,00,000/–**ம் மற்றும் வாடகைத் தொகை ரூ.**9,00,000/–**ம் என தனியார் பொருட்காட்சி நடைபெறும் நாள் முதல் முடியும் வரை நிர்ணயம் செய்து, திருவாளர்கள். மதுரை எண்டர்டைன்மெண்ட், மதுரை, நிறுவனத்திற்கு அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

அனுமதிக்கலாம்.

**(கே1/3599/2022)**

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

11) **திருமதி மா.சாரதாதேவி, துணைமேயர், சேலம் மாநகராட்சி அவர்களின் தீர்மானம்**

சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண்.7ற்கு விஜயநகர் தெருவிற்கு சாக்கடை வசதி இல்லாத காரணத்தினால் மழைநீர் தேங்கி இருப்பதால் மழைநீர் ஆனது வீட்டிற்குள் புகுந்துவிடுகிறது. இதனால் மக்கள் வெகுவாக பாதிக்கப்படுகின்றனர். அதனால் விஜயநகர் தெருவிற்கு மழைநீர் வடிகால் பிரச்சனையை சரிசெய்தும் மற்றும் தார்சாலை அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

12) **திருமதி மா.சாரதாதேவி, துணைமேயர், சேலம் மாநகராட்சி அவர்களின் தீர்மானம்**

சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண்.7ற்கு சிண்டிகேட் பேங்க் குறுக்கு தெருவில் உள்ள ஏழுமலைநகர் தெருவிற்கு சாக்கடை வசதி இல்லாத காரணத்தினால் மழைநீர் தேங்கி இருப்பதால் மழைநீர் ஆனது வீட்டிற்குள் புகுந்துவிடுகிறது மற்றும் அதிகமாக கொசு தொல்லை இருப்பதனால் மக்களுக்கு பல நோய்கள் ஏற்படுகின்றன. இதனால் மக்கள் வெகுவாக பாதிக்கப்படுகின்றனர். அதனால் ஏழுமலைநகர் தெருவிற்கு மழைநீர் வடிகால் பிரச்சனையை சரிசெய்தும் மற்றும் சாக்கடை வசதி அமைக்கவும் இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

13) **2வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.சி.பன்னீர்செல்வம் அவர்களின் தீர்மானம்**

S.1401 ஜாகீர் அம்மாபாளையம் நகர கூட்டுறவு கடன் சங்கத்தின் நியாய நிலைக்கடை AC005 ஜாகீர் அம்மாபாளையம் பாரதிநகரில் வாடகை கட்டிடத்தில் இயங்கி வருகிறது. பொருட்களை எடுத்து செல்ல பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகிறார்கள். மாநகராட்சிக்கு சொந்தமான 2வது கோட்டம் பாரதிநகர் பகுதி சர்வே எண்.248/2 இடம் காலியாக உள்ளது. மேற்படி இடத்தை நியாய விலைக்கடை கட்டுவதற்கு S.1403 ஜாகீர் அம்மாபாளையம் நகர கூட்டுறவு கடன் சங்கத்திற்கு செய்து கொடுக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். அரசு விதிமுறைக்கு உட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

14) **11வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி டி.இந்துஜா அவர்களின் தீர்மானம்**

சேலம் மாநகராட்சி 11வது கோட்டம் என்.ஜி.ஜி.ஓ. காலனியில் சாலை வசதியும், சாக்கடை வசதியும் அமைத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

15) **திருமதி செ.உமாராணி, வார்டு குழுத் தலைவர், அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம் (15வது கோட்டம்) அவர்களின் தீர்மானம்**

சேலம் மாநகராட்சி கோட்டம் எண்.15க்கு உட்பட்ட ஐயர் தோட்டம் செல்லும் வழியில் உள்ள தரைப்பாலம் கனமழையின் காரணமாக வெள்ளத்தால் முழுவதுமாக அடித்துச் செல்லப்பட்டது. அதனால் அப்பகுதியில் வசிக்கும் 150க்கும் மேற்பட்ட குடும்பங்கள் போக்குவரத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, அதன் அவசர அவசியத்தை கருதி புதிய பாலம் அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

16) **திருமதி செ.உமாராணி, வார்டு குழுத் தலைவர், அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம் (15வது கோட்டம்) அவர்களின் தீர்மானம்**

சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி மண்டலத்திற்கு உட்பட்ட ஏ.டி.சி. தரைபாலம் கனமழை காரணமாக பழுதடைந்து விட்டது. அங்கு புதிதாக பாலம் அமைத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

17) **திருமதி செ.உமாராணி, வார்டு குழுத் தலைவர், அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம் (15வது கோட்டம்) அவர்களின் தீர்மானம்**

சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட அஸ்தம்பட்டி மண்டலத்தில் உள்ள ஓடைகள் மற்றும் நீர்வழி பாதைகளை தூர்வாரி, ஆக்கிரமிப்புகளை அகற்றவும், அதன் கரைகளை வலுப்படுத்தவும் இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

18) **19வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி எஸ்.தேன்மொழி அவர்களின் தீர்மானம்**

சேலம் மாநகராட்சி 19வது கோட்டத்தில் காந்திநகரில் உள்ள ஐந்து வீதிகளிலும், ஜலால் தெருவில் உள்ள நான்கு வீதிகளிலும், கருணாநிதி நகரில் உள்ள நான்கு வீதிகளிலும் மற்றும் பொன்நகர், சித்தகவுண்டனூர் காலனி ஆகிய இடங்களில் (Gas)(கேஸ் பைப்பை போடுவதற்காக ஐந்து தெருக்களிலும் அங்கு பள்ளம் தோண்டி அங்குள்ள மக்களுக்கும் மற்றும் வாகனம் செல்வதற்கும் மிக சிரமமாக இருக்கின்றது. அங்குள்ள பள்ளத்தினால் சாக்கடையிலிருந்து தண்ணீர் வெளியே வருகிறது. இதனால் இங்கு கொசுத்தொல்லையும் அதிகமாகிவிட்டன. ஆகையால், இதை சரிப்படுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

19) **19வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி எஸ்.தேன்மொழி அவர்களின் தீர்மானம்**

சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டலத்திற்குட்பட்ட 19வது வார்டில் உள்ள மக்கள் பல்வேறு கோரிக்கைகள் வைத்துள்ளனர். பொதுமக்கள் நலன்கருதி கீழ்க்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்ற இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

1. ஜாகீர் சின்ன அம்மாபாளையம் பொதுசுகாதார கழிவறை கடந்த 10 வருடங்களாக சரியான பராமரிப்பு இன்றி மோசமான நிலையில் உள்ளது. பெண்கள் மற்றும் குழந்தைகள் இதனால் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். எனவே, இதனை சீர் செய்து தருதல்.
2. வீரபாண்டியார்நகரில் உள்ள பொதுகிணறு சுற்றுச்சுவர் இடிந்து தரைமட்டத்தில் உள்ளது. இதன் அருகே அங்கன்வாடி மையம் உள்ளதால் விரைவில் சுற்றுச்சுவர் அமைத்து இரும்பு வாயில் அமைத்து தருதல்.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

20) **19வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி எஸ்.தேன்மொழி அவர்களின் தீர்மானம்**

சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டலத்திற்குட்பட்ட 19வது வார்டில் உள்ள பல்வேறு தெருக்களில் (Gas)கேஸ் பைப்லைன் அமைப்பதற்காக சாலைகளில் குழிகள் தோண்டியதில் சாலைகள் சேதமடைந்து மோசமான நிலையில் உள்ளது. எனவே, பொதுமக்கள் நலன்கருதி கீழ்க்கண்ட தெருக்களில் தார்சாலை வசதி செய்ய இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

1. கண்ணகி தெரு
2. பாரதியார் தெரு
3. நக்கீரர் தெரு
4. ஔவையார் தெரு
5. தியாக பிரம்மம் தெரு
6. சுப்ரமணிய நகர் 1, 2, 3, 4 வீதிகள்

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

21) **19வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி எஸ்.தேன்மொழி அவர்களின் தீர்மானம்**

சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டலத்திற்குட்பட்ட 19வது வார்டில் உள்ள பல்வேறு தெருக்களில் பொதுவான குடிநீர் குழாய் வசதி இல்லாமல் உள்ளது. எனவே, பொதுமக்கள் நலன்கருதி கீழ்க்கண்ட தெருக்களில் குடிநீர் குழாய் வசதி மற்றும் நீர் சேமிக்க சின்டெக்ஸ் டேங்க் வசதி செய்ய இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**குடிநீர் குழாய் வசதி**

1. வள்ளியம்மாள் தெரு
2. சித்த கவுண்டர் காலனி
3. கண்ணகி தெரு
4. வீரபாண்டியார் நகர் 4 வீதிகள்
5. சின்ன அம்மாபாளையம் மாரியம்மன் கோவில் தெரு
6. கல்யாணசுந்தரம் காலனி
7. சிந்தகிபுரம்
8. 5வது தர்மநகர் மாரியம்மன் கோவில் தெரு

**சின்டெக்ஸ் டேங்க் வசதி**

1. மாரியம்மன் கோவில் தெரு
2. வீரபாண்டியார் நகர்
3. கல்யாண சுந்தரம் காலனி
4. சிந்தகிபுரம்

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

22) **19வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி எஸ்.தேன்மொழி அவர்களின் தீர்மானம்**

சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டலத்திற்குட்பட்ட 19வது வார்டு ஜாகீர் சின்ன அம்மாபாளையத்தில் அமைந்துள்ள ஆரம்ப தொடக்கப்பள்ளி கடந்த 30 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது. தகுந்த பராமரிப்பு இன்றி இடிந்து விழும் நிலையில் இருந்ததால், இடித்து தரைமட்டமாக்கப்பட்டது. இவ்விடத்தில் புதிய கட்டிடம் கட்டவும், மேலும் பள்ளி வளாகத்தில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு கழிப்பிட வசதி அமைக்கவும் இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

23) **19வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி எஸ்.தேன்மொழி அவர்களின் தீர்மானம்**

சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டலத்திற்குட்பட்ட 19வது வார்டில் உள்ள வீரபாண்டியார் நகர் 4 வீதிகள் மற்றும் வள்ளியம்மாள் தெருவில் மின்கம்பம் மற்றும் மின்விளக்கு வசதிகள் இல்லாமல் உள்ளது. எனவே, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு மின்கம்பம் (எண்ணிக்கை–20) மற்றும் மெர்குரி விளக்குகள் (எண்ணிக்கை–40) அமைக்கவும்,

மேலும், ஜாகீர் சின்ன அம்மாபாளையத்தில் அமைந்துள்ள மயானம் முட்புதர்கள் முளைத்து ஈமகாரியம் செய்ய முடியாத நிலையில் மோசமாக உள்ளது. மயானம் செல்லும் சாலையும் பழுதடைந்து போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது. மயானத்திற்கு காம்பவுண்ட் சுவர், மின்விளக்கு வசதி, காரியங்கள் செய்வதற்கு தண்ணீர் டேங்க் வசதி செய்யவும் இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

24) **22வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.கே.சி.செல்வராஜ் அவர்களின் தீர்மானம்**

சேலம் மாநகராட்சி கோட்டம் – 22. மலங்காட்டான் தெரு, அருந்ததியர் காலனி ஊர் பொதுமக்களின் கீழ்க்கண்ட பணிகளை நிறைவேற்றிட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

1. 25 ஆண்டுகளுக்கு முன்பு கட்டிய இடிந்து கீழே விழும் நிலையில் உள்ள பழைய சமுதாய கூடம் கட்டிடத்தை இடித்துவிட்டு அதே இடத்தில் புதிய சமுதாய கூடம் கட்டிடமும்,
2. 25 ஆண்டுகளுக்கு முன்பு கட்டிய இடிந்த நிலையில் உள்ள கழிப்பிட கட்டிடத்தை சீர் செய்து புதுப்பித்தும் அருகிலுள்ள சாக்கடை கால்வாய்–ஐ தூர்வாரியும்,
3. கிணறு சுற்றியும் பாதுகாப்பு வளையமும் மற்றும் தண்ணீர் டேங்க் புதுப்பித்தல்.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

25) <u>22வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.கே.சி.செல்வராஜ் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி கோட்டம் – 22. சிவதாபுரம் பகுதியில் கீழ்க்கண்ட பணிகளை செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

1. மலங்காட்டான் தெரு – சமயபுரம் மாரியம்மன் கோவில் முதல் வி.ஐ.பி.கார்டன் வரை தார்சாலையும், சாக்கடை வசதியும் செய்தல்.
2. வி.ஐ.பி.கார்டன் நுழைவுவாயில் முன்பு காசிராஜா மில் அருகில் புதிய மின்கம்பம் அமைத்து தெருவிளக்கு மற்றும் வி.ஐ.பி.கார்டன் தெரு முடிவில் கம்பமும் தெருவிளக்கும் அமைத்தல்.
3. வி.ஐ.பி.கார்டன் பகுதியில் புதிய குப்பைத்தொட்டி அமைத்தல்.
4. மலங்காட்டான் தெரு குப்புதாஸ் வீடு முதல் குணசேகரன் வீடு வழியாக அர்ச்சுனன் வீடு வழியாக தங்கராஜ் வீதி வரை கான்கிரீட் (அ) பேவர் பிளாக் சாலை அமைத்து தருதல் (கிராமநத்தம்)
5. மலங்காட்டான் தெரு கணபதிநகர் சாலை வசதி கான்கிரீட் (அ) பேவர் பிளாக் அமைத்துத்தருதல்.
6. கோதண்டராமர் கோவில் வீதி கழிவுநீர் வாய்க்கால் வசதி செய்தல்.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

26) <u>23வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி அ.சிவகாமி அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 23வது கோட்டம் பகுதியில் கீழ்க்கண்ட பணிகளை செய்ய இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

(I) திருவாக்கவுண்டனூர், மாரியம்மன் கோவில் இடதுபுறம் கண்ணகி தெருவிற்கு பிரதான சாலை பழுதடைந்து இருப்பதால் புதிததாக தார்சாலை அமைத்தல்.

(II) மாரியம்மன் கோவில் வலதுபுறம் மேத்தாநகர் செல்லும் பிரதான சாலை பழுதடைந்து இருப்பதால் புதிதாக அமைத்தல் மற்றும் குறுக்கு சாலை சுமார் 50 ஆண்டுகளாக அமைக்கப்படாமல் இருப்பதால் புதிதாக அமைத்தல்.

(III) கண்ணகி தெரு, அருளப்பர் வீதி மற்றும் பக்கத்து வீதியிலும் சாலை அமைத்தல்.

(IV) சூரமங்கலம் 23வது கோட்டத்தில் திருவாக்கவுண்டனூர் கண்ணகி தெருவில் உள்ள காந்தி ஆசிரமம் குறுக்கு சந்தில் பல வருடங்களாக 20க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகிறார்கள். அந்த தெருவில் உள்ள கழிவுநீர் வடிகால் தேங்கி துர்நாற்றம் வீசுகிறது. மேலும் மழைக்காலங்களில் மழைநீரில் சாக்கடை கழிவுநீர் கலந்து வீட்டிற்குள் புகுந்து விஷப்பூச்சிகள், தேள், பாம்பு, பூரான் போன்றவை வருகின்றது. மேலும் குழந்தைகள், பெரியவர்கள் வசிக்கும் இப்பகுதியில் நோய் தொற்று ஏற்படும் அபாயம் இருக்கிறது. ஆகையால், மேற்கண்ட பகுதிக்கு தேவையான பணிகளை செய்தல்.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

27) <u>30வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி ர.அம்சா அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி கோட்டம் எண்.30ல் கீழ்க்கண்ட பணிகளை செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

I) <u>கல்வெட்டு அமைக்கப்பட வேண்டிய தெருக்கள்</u>
1. முனியப்பன் கோவில் தெரு – 2 எண்ணிக்கை.
2. கபிலர் தெரு (பாரதிதாசன்சாலை) – 1 எண்ணிக்கை
3. மீனாட்சி அம்மன் கோவில் அருகில் – 1 எண்ணிக்கை
4. சுந்தரம் தெரு – 1 எண்ணிக்கை

II) <u>சாக்கடை கால்வாய் அமைக்கப்பட வேண்டிய இடங்கள்</u>
1. முனியப்பன் கோவில் தெரு – 2 பக்கமும்
2. அப்புசெட்டி தெரு – 2 பக்கமும்

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

28) <u>39வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி மா. ஜெயந்தி அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை 39வது கோட்டத்தில் உள்ள 3 மாநகராட்சி பள்ளிகளுக்கு கீழ்க்கண்ட பணிகளை செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

<u>1. வையாபுரி செட்டி தெரு மாநகராட்சி துவக்கப்பள்ளி</u>

1. வகுப்பறை கட்டிடம் 4 கட்டுதல்.
   பள்ளியில் 500 குழந்தைகள் படிக்கின்றனர். அவர்களுக்கு தேவையான வகுப்பறை கட்டிடம் கட்டுதல்.
2. கழிப்பறை வசதி (ஆண் மற்றும் பெண் தனித்தனியாக)
3. குடிநீர் வசதி (போர்வெல்)

<u>2. வையாபுரி செட்டி தெரு உயர்நிலைப்பள்ளி</u>

1. கூடுதல் 4 வகுப்பறை கட்டிடங்கள் கட்டுதல்.
2. மாணவர்களுக்கு மிதிவண்டி நிழற்கூடம் அமைத்தல்.
3. கூடுதல் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைத்தல்.

<u>3. பசுபல குருநாதன் தெரு துவக்கப்பள்ளி</u>

1. கூடுதல் 3 வகுப்பறை கட்டிடங்கள் கட்டுதல்.
2. கழிப்பறை வசதி (2 எண்ணிக்கை) செய்தல்.
3. மாணவர்கள் அமர்ந்து சாப்பிட தரைதளம் அமைத்தல்.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

29) <u>44வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.மு.இமயவர்மன் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 44வது கோட்டத்திற்குட்பட்ட எருமாபாளையம் நடுநிலைப்பள்ளியில் சுமார் 200 குழந்தைகள் கல்வி பயிலுகின்றனர். இங்கு 1 முதல் 8ம் வகுப்புக்கு பாடம் எடுக்கப்படுகிறது. பள்ளிக்குள் காம்பவுண்ட் பகுதிக்குள் உள்ள கட்டாந்தரையானது மழைக்காலத்தில் சேறும் சகதியுமாக உள்ளது. மேலும் இந்த காம்பவுண்டுக்குள் 7 அங்கன்வாடி மையங்கள் இயங்கி வருவதால், மழைக்காலத்தில் குழந்தைகள் கடுமையான இன்னலுக்கு உள்ளாகின்றனர். அதோடு மட்டுமல்லாமல் பள்ளியின் மேற்கூரையில் தண்ணீர் தேங்கி கட்டிடங்கள் மிகவும் பழுதாகி உள்ளதால் கட்டாந்தரைக்கு தரைத்தளம் போடவும், மேற்கூரைக்கு மராமத்து செய்திடவும் இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

30) <u>50வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு என்.பழனிசாமி அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி கொண்டலாம்பட்டி மண்டலம் கோட்டம் எண்.50 முனியப்பன் கோயில் தெரு – பகுதியில் பழுதடைந்துள்ள நூலகத்தை இடித்துவிட்டு, புதிய நூலகம் கட்ட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

31) <u>திரு.மா.அசோகன், வார்டு குழுத் தலைவர், கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகம், (52வது கோட்டம்) அவர்களின் தீர்மானம்.</u>

சேலம் மாநகராட்சி கொண்டலாம்பட்டி மண்டலம் முன்பு 51வது கோட்டத்தில் இருந்தது. இப்பொழுது கடந்த 20 வருடங்களாக தாதகாப்பட்டி 55வது கோட்டத்தில் செயல்பட்டு வருகிறது. பொதுமக்கள் கொண்டலாம்பட்டி மண்டலம் என்று சொன்னால் கொண்டலாம்பட்டி பழைய இடத்திற்கு சென்று விடுகிறார்கள். ஆகவே, பொதுமக்கள் நலன்கருதி தாதகாப்பட்டி மண்டலம் என்று பெயர் மாற்றம் செய்ய இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். அரசு விதிமுறைக்கு உட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

32) <u>53வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி எஸ். ஷாதாஜ் அவர்களின் தீர்மானம்</u>

சேலம் மாநகராட்சி 53வது வார்டுக்கு உட்பட்ட மாநகராட்சி உருது துவக்கப்பள்ளிக்கு இரண்டு தளங்கள் உள்ளன. இதில் கீழ்தளம் மற்றும் மேல்தளத்தில் உள்ள காரை உடைந்து, ஈரப்பதம் நிறைந்து உள்ளதால், அதை அகற்றி அதற்கு பதிலாக டைல்ஸ் போடவும், பள்ளிக்கு தேவையான பென்ச், நாற்காலிகள், பிளாக் போர்டு ஆகிய பள்ளிக்கு தேவையான வசதிகளை செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

**33)** சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்குட்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் திரு.மணிராமன், த/பெ. பொன்னுசாமி, 112 வள்ளலார் தெரு, கிச்சிப்பாளையம், சேலம்–15, என்பவரின் விண்ணப்பத்தில் சேலம் மாநகராட்சி, புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான கிழமேல் காலி மைதானத்தில் தீபாவளி முன்னிட்டு பட்டாசு சில்லரை விற்பனை நிலையம் அமைக்க காலியிடம் (சுமார் 2000 சதுர அடி) 15.10.2022 முதல் 25.10.2022 ஆம் தேதி வரை 11 நாட்களுக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளதின்பேரில், சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு அலுவலகத்திற்கு சம்மந்தப்பட்ட புதிய பேருந்து நிலையம் கிழபுறம் உள்ள மாநகராட்சி பயன்பாட்டு பகுதி நீங்கலாக மீதமுள்ள (சுமார் 2000 சதுர அடி) காலியிடத்தில் திரு.மணிராமன், த/பெ. பொன்னுசாமி, சேலம்–15, என்பவருக்கு பட்டாசு சில்லரை விற்பனை நிலையம் அமைத்து நடத்துவதற்கு 15.10.2022 முதல் 25.10.2022 ஆம் தேதிவரை நடத்திட 11 நாட்களுக்கு காலியிடத்திடத்திற்காக முன்வைப்புத்தொகை ரூ.1,00,000/–ம் மற்றும் வாடகை தொகையாக ரூ.1,00,000/–ம் என நிர்ணயம் செய்து, திரு.மணிராமன், த/பெ. பொன்னுசாமி என்பவருக்கு பட்டாசு சில்லரை நிலையம் அமைக்க அனுமதி வழங்கிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : –

அனுமதிக்கலாம்.

(கே1/3717/2022)

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

(ஒம்) ஆ. இராமச்சந்திரன்
மேயர்
சேலம் மாநகராட்சி.

சேலம்–1.
28–09–2022.